# PRESS NOTE

The complainant Tr.A.Abdul Basith's was having a Foot Wear Shop at Seven Wells Road, Sowcarpet, Chennai-1. The Complainant brother-in-law had purchased a house at Seven Wells Street, Chennai and a sale deed was registered on 18.10.2010 at the Sub Registry of Sowcarpet. Subsequently, a power of attorney was given to the complainant and the same was also registered in the same Sub Registry on 21.10.2010.

On 10.02.2011 he met the accused Tmt.Radha, Sub Registrar, Sowcarpet in the office of the Sub Registrar, Sowcarpet, Chennai-1 and requested Power of Attorney document from the accused Tmt.V.Radha. She had demanded Rs.5,000/- as bribe for the issuance of registered documents of the complainant's brother-in-law. The complainant was unwilling to pay the bribe. He came to the V&AC office, Special Investigation Cell on 10.02.2011 at about 12.30 hrs and gave a written complaint. In this connection a case was registered by Vigilance and Anti-Corruption the accused officer Tmt.Radha was arrested and sent to Judicial Custody for the demand and acceptance of illegal gratification of Rs.5,000/- for issuing Power of Attorney.

The above said case was under trial at the Special Court, Chennai. Today (14.11.2022) the Special Court, Chennai delivered the judgment and accused officer Tmt.V.Radha, Sub-Registrar (in the grade of District Registrar), now she is suspended and not allowed to retirement was convicted for the offence committed u/s. 7 of Prevention of Corruption Act, 1988. The Accused Officer is sentenced to undergo Rigorous imprisonment for One year and shall pay a fine of Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months and u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988 the Accused Officer is sentenced to undergo Rigorous imprisonment for Two years and shall pay a fine of Rs.1,000/- concurrently.

## <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>பவர் பத்திரத்தினை வழங்க லஞ்சம் பெற்ற குற்றத்திற்கு முன்னாள் மாவட்ட பதிவாளர் நிலையில் உள்ள சார்பதிவாளருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பு</u>

*****

புகார்தாரரின் மைத்துனர் திரு.ஜியாவுல் உறக் சென்னை ஏழுகிணறு பகுதியில் உள்ள எண் 97, புதிய எண் 89ல் என்ற வீட்டினை 18.10.2010 அன்று தனது பெயரில் பத்திர பதிவு செய்துள்ளார். பின்னர் மைத்துனர் வெளிநாடு செல்வதால், புகார்தாரர் திரு.அப்துல் பஷீத் பெயரில் பவர் ஆஃப் அட்டர்னி 21.10.2010 அன்று சவுக்கார்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன்பேரில், புகார்தாரர் 10.02.2011 அன்று பவர் ஆஃப் அட்டர்னியின் அசல் ஆவணத்தினை சவுக்கார்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார்பதிவாளர் திருமதி.ராதா அவர்களிடம் கேட்டு உள்ளார். அதற்கு திருமதி.ராதா தனக்கு லஞ்சமாக ரூ.5,000/- கொடுத்தால் தான் பவர் ஆஃப் அட்டர்னி அசல் ஆவணத்தினை தர முடியும் என்று புகார்தாரரிடம் கூறியுள்ளார். புகார்தாரருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழுவில் புகார் கொடுத்துள்ளார். அதன்பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழு 10.02.2011 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டு ரூ.5,000/- லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக சார்பதிவாளர் திருமதி.ராதா அவர்களை கைது செய்யப்பட்டு, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கானது, சென்னை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், மேற்படி முன்னாள் சார்பதிவாளர் திருமதி.ராதா மீது குற்றம் உறுதி செய்யப்பட்டு இன்று 14.11.2022 இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் சார்பதிவாளர் திருமதி.ராதா அவர்களுக்கு சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் ஒரு ஆண்டு சிறைதண்டனையும், ரூபாய் ஆயிரம் அபராதமும் மற்றும் u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988, இரண்டு

ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூபாய் ஆயிரம் அபராதமும் விதித்து தண்டணைகளை ஏக காலத்தில் அனுபவிக்க தீர்ப்பு வழங்கப்பட்டது.